**செ.வெ.எண்-28** **நாள்-12.10.2018**

# அரியலூர் மாவட்டத்தில் முத்ரா கடன் திட்டம் மூலம் வங்கி லோன் மேளா நடைபெற்றது.

அரியலூர் மாவட்டம், கீழப்பழூர் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் சார்பில் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களுக்கு சுயதொழில் தொடங்க முத்ரா கடன் திட்டத்தின் மூலம் வங்கி லோன் மேளாவினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,** அவர்கள் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, வங்கி கடன் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்களை பெற்றுக்கொண்டார்கள்.

இப்பயிற்சி நிறுவனத்தின் மூலம் 200-க்கும் மேற்பட்ட தொழில் பயிற்சிகள், 5000க்கும் மேற்பட்ட வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில் சுமார் 4000க்கும் மேற்பட்டவர்கள் சுயமாக தொழில் செய்து கை நிறைய சம்பாதித்து கொண்டிருக்கின்றனர்.

மேலும் ஊக்கப்படுத்தும் வகையில் முத்ரா கடன் திட்டத்தின் மூலம் தங்களின் தொழிலை மேம்படுத்துவதற்காக சுமார் 150 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, வங்கிகள் மூலம் சுமார் **ரூ.1 கோடி** அளவிற்கு கடன் வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில், எஸ்.பி.ஐ முதன்மை மேலாளர் (விழுப்புரம்) ஜான்வெட், எஸ்.பி.ஐ மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் (அரியலூர்) இளஞ்சேரன், திட்ட மேலாளர் மாவட்ட தொழில் மையம் சகுந்தலா, உதவி இயக்குநர் கதர் கிராம வாரியம் (சென்னை) ஜெயபிரகாஷ், எஸ்.பி.ஐ முதன்மை மேலாளர் (அரியலூர்) வெங்கிடாசலம், எஸ்.பி.ஐ மேலாளர் (வாலாஜநகரம்) கோபிநாத், எஸ்.பி.ஐ ஊரக சுயவேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம் இயக்குநர் (அரியலூர்) வெங்கிடாசலம் மற்றும் பயிற்சி பெற்றவர்கள், அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**